கனகாம்பரம் சுமார் 200—300 ஏக்கரிலும், மருவு 50 ஏக்கரிலும் சாகுபடி செய்து இருக்கிறோம். இதற்கு தமிழக சர்க்காரிலும், மத்திய சர்க்காரிலும் ஒரு திட்டம் கொண்டு வர வேண்டுமென்று ஆலோசனை கூறியிருக்கிறோம். அது விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஓட்டல் தொழில்

* 292 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரிய ஓட்டல்களை அரசுடைமையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஓட்டல்களை அரசுடைமையாக்கும் திட்டம் தற்போது இல்லையென்றாலும், டெல்லியில் மத்திய அரசு அசோகா ஓட்டல் நடத்துவது போன்று, நம்முடைய அரசும் 5 நட்சத்திர ஓட்டல் ஒன்றைக் கட்டி, வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்கும் வகையில் முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன். சென்னையில் 65 மாடி ஓட்டல் ஒன்று கட்டுவதற்கான முயற்சி எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அரசு சுற்றுலாத் துறையின் மூலமாக அப்படிப்பட்ட ஓட்டல் ஒன்று கட்டுவதற்கான உத்தேசம் இல்லை. 65 மாடி ஓட்டல் கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : சார், பெரிய ஓட்டல்களை அரசுடைமையாக்காவிட்டாலும்—அரசுடைமையாக்கும் திட்டம் மக்களுக்கு எளிதான வகையில், குறைந்த விலையில் சாமான்கள் கிடைக்க வேண்டுமென்பது தான்—அதையாவது செய்து கொடுக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, ஓட்டல்களை அரசாங்கம் ஏற்று நடத்தும் திட்டம் இல்லை. சுற்றுலா வாரியத்தைப் பொறுத்த வரையில் ஓட்டல்களைத் திறந்து

1972 ஆகஸ்ட் 23]

குறைந்த விலையில் சாமான்களை சப்ளை செய்வது என்ற எண்ணம் இல்லை. வெளி நாட்டுப் பயணிகளை ஈர்க்க வேண்டும், அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் தான் சுற்றுலா வாரியம் ஓட்டல்களை நடத்திக்கொண்டு வருகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, எலியெட்ஸ் கடற்கரையில் இன்டர்நேஷனல் ஓட்டல் ஒன்று கட்டுவதாகத் திட்டம் இருந்ததே, அது என்னவாயிற்று ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, எலியெட்ஸ் கடற்கரையில் 5 ஸ்டார் ஓட்டல் ஒன்று கட்டுவதற்காக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அது ஏற்கெனவே ஒருவருக்குக் கொடுக்கப் பட்டு, அவர் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். அந்த இடம் அப்படியேயிருக்கிறது. வேறு யாரேனும் விண்ணப்பிப்பார்களானால் அதை அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, ஓட்டல்கள் நிறைய இருக்கின்றன என்றாலும், அவை சரிவர வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் இல்லையென்ற குறையைச் சொல்லு கிறார்கள். ஆகவே, இப்போது அப்படிப்பட்ட ஓட்டல்களில் பணியாற்றுகிறவர்களுக்கு எப்படிப் பயணிகளைக் கவனிக்க வேண்டுமென்பதற்காக ஒரு பயிற்சி நிலையமோ, கல்லூரியோ ஆரம்பித்து, அவர்களுக்கு அம்முறையில் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா ? வெளி நாடுகளில் இருக்கிற ஓட்டல்களில் அழகான இளம் பெண்கள் மிக நல்ல முறையில் ஓட்டல்களுக்கு வருபவர்களை வரவேற்று உபசரிக்கிறார்கள். அந்த முறையை இங்கேயும் பின்பற்ற அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தமிழ் நாட்டின் கலாசாரம், பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தான் நாம் இங்கே ஓட்டல்களை நடத்த முடியும். அந்த வகையில் தான் இங்குள்ள ஓட்டல்கள் நடத்தப்படுகின்றன. வெளிநாட்டுப் பயணிகள் நம் நாட்டின் கலாசாரம், கலை, சிற்பங்கள், பண்பாடு ஆகியவற்றை அறிந்து கொள்ள, தெரிந்து கொள்ள, பார்த்துச் செல்லத்தான் வருகிறார்கள். அந்த வகையில் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் சென்னையில் பல ஓட்டல்கள் இருக்கின்றன.